" கண்ணைக் காப்பது இமை "
" மண்ணைக் காப்பது மழை "

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2013-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23-ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**அ) திருக்குறள் :** **" மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்**
**தகுதியான் வென்று விடல்."**

**பொருள் :** **ஆணவத்தால் தமக்குக் கொடுமைகள் செய்தவரையும் பொறுமையோடு தம் தகுதிகளை உயர்த்தி வெல்ல வேண்டும்.**

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

### 1) மநி 1/37143/2013

மதுரை மாநகராட்சி ஆணையாளராக பணிபுரிந்து வந்த முனைவர்.இரா.நந்தகோபால், இ.ஆ.ப., அவர்கள் வேலூர் மாவட்ட ஆட்சியாளராக பணி மாறுதலில் சென்றதால், திரு.கிரண்குராலா.இ.ஆ.ப., (கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மற்றும் திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சிவகங்கை) அவர்களை மதுரை மாநகராட்சி ஆணையாளராக நியமனம் செய்து வெளியிடப்பட்ட அரசாணை எண்: (G.O.Rt.No.4015, பொது (சிறப்பு–அ) துறை, நாள்: 17.11.2013-ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.556**
**பதிவு செய்யப்பட்டது.**

### 2) மநி 1/35057/2013

மதுரை மாநகராட்சியில் காலியாக இருந்து வரும் நகரப்பொறியாளர் பணியிடத்திற்கு மதுரை மாநகராட்சியில் உதவி ஆணையாளர் மண்டலம் –2 ஆக பணிபுரிந்து வரும் திரு.A.மதுரம் செயற்பொறியாளரை பணி உயர்வு செய்து வெளியிடப்பட்ட அரசாணை எண்: G.O (D) No.525, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 15.10.2013ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.557**
**பதிவு செய்யப்பட்டது.**

## 3) மறி 1/37677/2013

மதுரை மாநகராட்சியில் காலியாக இருந்து வரும் கண்காணிப்பு பொறியாளர் (JNNURM) பணியிடத்திற்கு பணி மாறுதல் மற்றும் பணி உயர்வில் திரு.K.ராஜசேகரன், மண்டல செயற்பொறியாளர், தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் அவர்களை மதுரை மாநகராட்சி கண்காணிப்பு பொறியாளர் (JNNURM) ஆக நியமனம் செய்து வெளியிடப்பட்ட அரசாணை எண்: G.O (D)No.565, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ME-III) துறை, நாள்: 14.11.2013ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.558**
**பதிவு செய்யப்பட்டது.**

## 4) B30/47282/95

மதுரை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்படுவதற்கு முன்பு 72 வார்டுகள் இருந்து வந்தது. மாநகரின் மொத்தப்பரப்பளவு 51.96 சதுரகிலோமீட்டராக இருந்து வந்தது. மதுரை மாநகராட்சியில் அப்போது இருந்த 16873 (பதினாறாயிரத்து எண்ணூாற்றி எழுபத்தி மூன்று) எண்ணிக்கையிலான தெருவிளக்குகளை பராமரிக்க நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந4) துறை நாள் : 10.06.1997 தேதிய அரசாணை நிலை எண்151–ன்படி கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் நியமிக்க அனுமதி வழங்கப்பட்டு, தற்போது பணிபுரிந்து வருகிறார்கள்.

| வ.எண் | பதவி விபரம் | அரசு அனுமதி வழங்கிய பணியாளர்கள் எண்ணிக்கை | தற்போது பணிபுரியும் பணியாளர்கள் எண்ணிக்கை | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 4 | 1 | – |
| 2. | மின்பாதை ஆய்வாளர் | 4 | 3 | 1 நபர் இறப்பு |
| 3. | எலக்ட்ரீசியன் | 8 | 3 | 1 நபர் இறப்பு |
| 4. | மின்கம்பியாளர் | 16 | 8 | – |
| 5. | உதவியாளர் | 16 | 2 | – |
| 6. | தேர்ச்சிதிறனற்ற பணியாளர் | – | 28 | – |
| 7. | வாகன ஓட்டுநர் | 4 | 6 | – |
| 8. | தினக்கூலி பணியாளர் | 40 | 32 (ஒப்பந்த பணியாளர்கள்) | – |

ஆனால் 2011 ஆம் ஆண்டு மாநகராட்சியுடன் 28 வார்டுகள் இணைக்கப்பட்டது. அதனால் மேற்படி புதிய பகுதிகளில் உள்ள 16441 (பதினாறாயிரத்து நாணூற்றி நாற்பத்து ஒன்று) விளக்குகளையும் சேர்த்து மொத்தத்தில் 45710 (நாற்பத்து ஐந்தாயிரத்து எழுநூற்று பத்து) விளக்குகளையும் தற்போது மாநகராட்சி பராமரிப்பு செய்து வருகிறது. இந்நிலையில் புதிதாக இணைக்கப்பட்ட வார்டுகளில் உள்ள விளக்குகளை பராமரிக்கவும், இந்த வார்டுகளில் சுமார் 4000 (நான்காயிரம்) விளக்குகள் புதிதாக பொருத்துவதற்கும் ESCO (PPP Model) திட்டத்தின் கீழ் பராமரிப்பு செய்ய டெண்டர் வரவழைக்கப்பட்டு அதற்கான முதற்கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

மாநகராட்சியின் பழைய 72 வார்டுகளில் 29269 (இருபத்து ஒன்பதாயிரத்து இருநூற்று அறுபத்து ஒன்பது ) தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது, மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள 28 வார்டுகளிலும் 16441 (பதினாறாயிரத்து நாணூற்றி நாற்பத்து ஒன்று) தெருவிளக்குகள் உள்ளன. புதிதாக பொருத்தப்பட உள்ள 4000 (நான்காயிரம்) தெருவிளக்குகள்

ESCO (PPP Model)-ன் மூலம் அமைத்து பராமரிக்கப்பட இருப்பதாலும் இவைகளையும் கண்காணிப்பு செய்வதற்கும் போதிய கண்காணிப்பு பணியாளர்கள் தேவைப்படுகிறது. மேலும் பழைய மற்றும் புதியதாக இணைக்கப்பட்ட மொத்தம் 100 வார்டுகளின் மொத்தப்பரப்பளவு 147.50 சதுரகிலோமீட்டர் சுற்றளவில் அமைந்துள்ளதால் இதில் உள்ள 45710 (நாற்பத்து ஐந்தாயிரத்து எழுநூற்று பத்து) தெருவிளக்குகளை பராமரித்து, கண்காணிக்கவும், மாநகராட்சி அலுவலக கட்டிடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், அலுவலர்கள் குடியிருப்பு பகுதிகள், வரிவசூல் மையங்கள், உள்வட்ட சுற்றுச்சாலை சுங்கசாவடி, மருத்துவமனைகள், பூங்காக்கள் ஆகியவைகளில் உள்ள மின்சாதனங்கள் சம்பந்தமான பணிகளையும் செய்ய வேண்டியுள்ளது.

தெருவிளக்கு பராமரிப்பு அத்தியாவசிய பணியாக இருப்பதால் கீழ்க்கண்ட எண்ணிக்கையிலான அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

| வ. எண் | பதவி விபரம் | அரசு ஆணையின்படி அனுமதி வழங்கப்பட்ட பணியிடம் | அரசு வழி காட்டுதலின் படி | தற்போது பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் விபரம் | கூடுதலாக தேவையான அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் | அரசு அனுமதி வேண்டிய மொத்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | உதவி செயற்பொறியாளர் (மின்னியல்) | - | - | - | 2 | 2 |
| 2 | உதவி /இளநிலை பொறியாளர் (மின்னியல்) | 4 | - | 1 | 7 | 8 |
| 3 | தொழில்நுட்ப உதவியாளர் | - | - | - | 10 | 10 |
| 4 | மின்பாதை ஆய்வாளர் | 4 | - | 3 | 5 | 8 |
| 5 | எலக்ட்ரீசியன் | 8 | - | 7 | 9 | 16 |
| 6 | மின்கம்பியாளர் | 16 | 600 லைட்டுக்கு ஒரு நபர் வீதம் | 8 | 44 | 52 |
| 7 | உதவியாளர் (டெக்னிக்கல் ஹெல்பர்) | 16 | 600 லைட்டுக்கு ஒரு நபர் வீதம் | 2 | 50 | 52 |
| 8 | தினக்கூலி பணியாளர் | 40 | - | 106 (ஒப்பந்த பணியாளர்கள்) | - | - |

பொதுமக்கள் நலன்கருதி தெருவிளக்குபணியை துரிதமாக செயல்படுத்துவதற்கு மேற்கண்ட கூடுதல் பணியிடங்களை தோற்றுவிப்பதற்கும் இப்பணியிடங்களை தோற்றுவிப்பதனால் ஏற்படும் செலவினங்களை மதுரை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.559</u>

<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

5) <u>ம.பொ.4/ம.எண்.1017/13-14</u>

மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 வார்டு எண்.44ல் உள்ள மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் அருகில் ஆம்னி பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நிறுத்துமிடம் அமைக்கும் பணிக்கு ரூ.91.00 (ரூபாய் தொண்ணூற்று ஒன்று) இலட்சத்தில் மதிப்பீட்டு தயார் செய்யப்பட்டு, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு, கடந்த 08.11.2013 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் விபரம் பின்வருமாறு :

1) மெசர்ஸ் கௌரி கன்ஸ்ட்ரக்சன்
எண்.48, மணி நகர் விரிவாக்கம்,
காந்தி நகர், பன்ரூட்டி (தாலுகா)
நெய்வேலி, கடலூார்.

2) R.லிங்கதுரை
எண்.12, கார்ப்பரேசன் காலனி,
ஆரப்பாளையம், மதுரை.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் மூலம் ஒப்புநோக்கு செய்யப்பட்டது. அவ்வாறு ஒப்புநோக்கு செய்யப்பட்டு மேற்கண்ட இரு ஒப்பந்தக்காரர்களின் விலை விகிதம் திறக்கப்பட்டது. அவ்வாறு விலைப்புள்ளி திறக்கப்பட்டதில் மெசர்ஸ். கௌரி கன்ஸ்ட்ரக்சன், நெய்வேலி, கடலூார் நிறுவனம் மதிப்பீடடு விலை விகிதத்தினை விட 4.95% சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி தெரிவித்திருந்தனர். இந்நிலையில் விலை குறைப்பு செய்ய மேற்கண்ட நிறுவனத்திடம் கோரப்பட்டது. அதன் படி சம்பந்தப்பட்ட நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4% சதவீதம் கூடுதலாக செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார்கள். எனவே மேற்கண்ட நிறுவனத்தின் விலை விகிதத்தினை ஏற்று அன்னாருக்கு வேலை உத்திரவு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர்(பொ) அவர்களின் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.560</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

6) <u>ம.பொ.1/34513/2013</u>

மதுரை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சாலையோரங்களில் ஆதரவற்ற நிலையில் மரணமடையும் நபர்களை மயானத்திற்கு எடுத்து சென்று உரிய முறையில் அடக்கம் செய்ய 1995ல் மாநகராட்சி சார்பாக அமரர் ஊர்தி(Mertuary Van) வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்நிலையில் தற்போது இவ்வாகனத்தின் பராமரிப்பு காலம் கடந்துவிட்ட நிலையில் இவ்வாகனத்தில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அறிவுரையின் பேரில் புதிய வாகனம் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. சிறப்பு அரசு விலை விகிதத்தின்படி (Special Government Rate) வாகனம் ஒன்றிற்கு உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகனத்தின் உத்தேச மதிப்பீட்டுத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக ஒப்புதல் கோரி மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர்(பொ) அவர்களின் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.561</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,
மேயர்
மதுரை மாநகராட்சி

மதுரை
நாள் : 17.12.2013

**நாள்: 23.12.2013**

***தீர்மானம் – 1***

தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள், தமிழ்நாடே என் குடும்பம் என்று தமிழ்நாட்டு மக்களுக்காகவே வாழ்ந்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள், சென்னையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை மாநாட்டில் மக்கள் நலனுக்காக 312 வளர்ச்சித் திட்டங்களை அறிவித்து, இதில் இந்த ஆண்டிற்கு மதுரை மாவட்டத்திற்கு ரூபாய் 100 கோடி மதிப்பில் பல்வேறு திட்டங்களான மதுரை ராஜாஜி மருத்துவமனையில் ஏழை எளிய மக்கள் பயன்பெறுகின்ற வகையில் அம்மா உணவகம், செயின்ட்மேரீஸ் பள்ளி அருகே உள்ள சிந்தாமணி ரோட்டில் புதிய இரயில்வே மேம்பாலம் உட்பட பல்வேறு திட்டங்களை மதுரை மாநகர மக்களுக்கு தந்திட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்களுக்கு இம்மான்றம் கோடான கோடி நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றது.

**மாமன்றத்தீர்மானம் எண்.552**

**மேயர்**

***தீர்மானம் – 2***

மத்திய ஆட்சிப் பொறுப்பில் தொடர்ந்து பல ஆண்டுகள் பங்கேற்றபோதும் எந்தவொரு நற்செயலையும் தமிழகத்திற்கு செய்யாமல், மாறாக காவேரி நதிநீர், முல்லைப் பெரியாறு போன்ற பிரச்சனைகளில் தன் சுயலாபத்திற்காக மத்திய அரசிடம் பேசாமல் வாய்மூடி மௌனியாக இருந்தும், தமிழக மீனவர்களுக்கு சொந்தமான கட்சத் தீவை இலங்கைக்கு இந்திய அரசால் தாரை வார்க்கப்பட்டபோது வாய்மூடி மௌனியாக இருந்து, தமிழ் மண் அபகரிக்கப்பட காரணமாக இருந்த கருணாநிதி தொடர்ந்து தமிழ்நாட்டில் ஆட்சி செய்த போதெல்லாம் லஞ்ச ஊழல்கள் மற்றும் அராஜக செயல்களை எல்லாம் கட்டவிழ்த்துவிட்டு அதன்மூலம் ஏழை, எளிய அப்பாவி மக்களின் நிலங்களை எல்லாம் கபளிகரம் செய்தது மட்டுமல்லாது, தமிழகத்தின் அனைத்து துறைகளையும் சீரழித்து, இதில் குறிப்பாக தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ரூபாய் 40,000 கோடியை கடனில் மூழ்க வைத்தது மட்டுமல்லாது, 4000 மெகாவாட் மின்சாரத்தை பற்றாக்குறையாக்கி சென்று அதன்மூலம் தமிழகத்தை இருளில் மூழ்க காரணமாக இருந்த தமிழ்நாட்டின் தீயசக்தி தமிழினத் துரோகி கருணாநிதியை இம்மாமன்ற கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது. தொடர்ந்து தமிழக மக்களுக்காக தன்னையே மெழுகுவர்த்தியாக உருக்கி கொண்டு தமிழகத்தை இந்திய அளவில் மிகப்பெரிய வளர்ச்சிப் பாதையில் கொண்டுசென்ற மாண்புமிகு **அம்மா** அவர்கள் அனைத்து துறைகளையும் சீர்செய்து இதில் மின்சாரத் துறையில் இருந்த ரூபாய் 40,000 கோடி கடனை நிவர்த்தி செய்து தொடர்ந்து மின்சாரப் பற்றாக்குறையை நீக்கி தமிழக மக்களுக்காக அல்லும் பகலும் பாடுபட்டுவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்களுக்கு இம்மாமன்ற கூட்டம் கோடான கோடி நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றது.

**மாமன்றத்தீர்மானம் எண்.553**

**மேயர்**

***தீர்மானம் –3***

மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று வரலாற்று சிறப்புமிக்க ஆட்சி நடத்திவரும் புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள் தி.மு.க செய்த ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் காரணமாக செயலிழந்து நின்ற தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சிறப்பு நிதி கேட்டும், தமிழகத்திற்கு மத்திய அரசு நியாயமான முறையில் மண்ணெண்ணெய் அளவை வழங்க வேண்டும், தமிழக மாணவ, மாணவிகளுக்கு சிறப்பு நிதி வழங்க வேண்டும், தமிழ்நாட்டில் ஏற்பட்ட கடும் வறட்சியை சமாளிக்க கூடுதல் நிதி வழங்க வேண்டும், கூடங்குளம் அணுமின் நிலையத்திலிருந்து உற்பத்தி ஆகும் முழு அளவு மின்சாரத்தை தமிழகத்திற்கு வழங்க வேண்டும் என்று பலமுறை மத்திய அரசிடம் **அம்மா** அவர்கள் கோரிக்கை வைத்தும், தமிழகத்திற்கு எந்தவொரு சிறப்பு நிதி தராமல், மாற்றான்தாய் மனப்பான்மையுடன் தொடர்ந்து தமிழகத்தை வஞ்சித்து வரும் மத்திய அரசை இம்மாமன்ற கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.554**

**மேயர்**

***<u>தீர்மானம் – 4</u>***

இந்த இரண்டரை ஆண்டுகளில் இந்திய அளவில் மட்டுமல்லாது உலக அரங்கில் மாண்புமிகு புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள் தமிழக மக்களுக்கு வழங்கிய வரலாற்று சாதனைகளை உற்று நோக்கி வருகின்றனர். இதுபோன்ற திட்டங்கள் இந்திய மக்கள் அனைவரும் ஏங்கி தவித்து தங்களுக்கும் கிடைக்காதா என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில் நிச்சயம் விரைவில் மாண்புமிகு புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள் பாரதப் பிரதமராக அரியணையில் அமர்வார்கள், அதற்கு முன்னோடியாக மதுரை மாநகர வளர்ச்சிக்காக இதுவரை ரூபாய் 600 கோடி அளவிலும் பல்வேறு வரலாற்று திட்டங்களை அளித்த அம்மா அவர்களின் சாதனைகளை மக்களுக்கு எடுத்துக்கூறியும் அம்மா அவர்களின் தாரக மந்திரமான அமைதி, வளம், வளர்ச்சி ஆகியவற்றை மக்களிடத்தில் மாமன்ற உறுப்பினர்களாகிய நாம் எடுத்துக் கூறுவோம் என்று இம்மாமன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.555</u>**

**மேயர்**